காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பல-கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 8996 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. உயர் தாக்க வானனிலை மற்றும் நீரியல் அபாயங்கள் பற்றிய எச்சரிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக களனி ஆற்றுப்பள்ளத்தாக்கு பல-நோக்கு நீர் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் என்பன இச் செயற்த்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உயர் தாக்க வானிலை, வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் பற்றிய முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை, கீழ் களனி ஆற்றுப்பள்ளத்தாக்கில் வெள்ள அபாயக் குறைப்பு முதலீடு, செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறு (சீஈஆர்சீ) ஆகிய நான்கு கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,600 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 93 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 18,400 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 92 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் (ஐபீஆர்டி) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 200 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 ஒக்தோபர் 12 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2026 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 01 | 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டி | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2023 பெப்ரவரி 28 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டம் 6 மாதத்திற்கு மேற்பட்ட காலதாமதத்துடன் 2023 செப்தெம்பர் 13 இல் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்தது. | செயற்திட்டத்திற்கான இறுதி கணக்குகள் மார்ச் முதல் வாரத்தில் பூர்த்தி செய்யப்பட்டு 2023.03.16 இல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றை மதிப்பாய்வு செய்து சரிபார்ப்பதற்கு அமைச்சு சிறிது காலத்தை எடுத்ததுடன் இது அத்தகைய நீண்ட காலதாமதத்திற்கு வழிவகுத்திருந்தது. எதிர்காலத்தில் ஏற்படும் காலதாமதத்தை குறைப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, பெப்ரவரி 28 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 02 | 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை | பொது 287 படிவங்களில் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டும். எனினும் அத்தகைய பதிவேடொன்று செயற்திட்டத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. | பொது 198 பொருளிருப்பு பதிவேடு செயற்திட்டத்தின் நிலையான சொத்துகளுக்கான பதிவுகளை பேணுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த பொருளிருப்பு பதிவேடு அமைச்சால் பேணப்படுகிறதால், இதே பதிவேடு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டது. எனினும், இருப்பு பதிவேட்டு இல. 287 அல்லது அதே பதிவேட்டை பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | பொது 287 படிவத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள், நி.பி. 371(2) (ஆ) | பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரிற்கு ”செயல்நிமித்த” உபகட்டுநிதி வழங்கப்படக்கூடிய போதிலும் எரிபொருளுக்கான செலவினங்களை எதிர்கொள்வதற்கு பதவிநிலை அல்லாத உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்ட ரூபா 1.5 மில்லியன் கூட்டுமொத்தமான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்ட 38 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | செயற்திட்டம் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினரை கொண்டிருந்ததுடன் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு உத்தியோகத்தர் எவரும் காணப்படவில்லை. போக்குவரத்தை மேற்பார்வையிடுவதற்கு சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் செயற்திட்ட வாகனங்களுக்கான எரிபொருள் முற்பணம் இந்த உத்தியோகத்தரிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக, முற்பணத்தைத் தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் எரிபொருள் முற்பணம் வழங்கப்பட வேண்டியிருந்தது. | நிதிப்பிரமாணத்தை கருத்தில் கொள்ளாமல் ”செயல்நிமித்த” உபகட்டுநிதி வழங்கப்படக்கூடாது. |
| 04 | 8996எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டியல் 2, பிரிவு 1 | செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட திகதியின் பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் தேசிய செயற்திட்ட மேற்பார்வைக் குழுவை செயற்திட்டம் உருவாக்க வேண்டும். இந்த செயற்திட்டம் 2021 ஒக்தோபர் 12 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் 2022 பெப்ரவரி 21 ஆம் திகதிய சீஆர்ஈஎஸ்எம்பிஏ/பிடி/என்பிஓசீ/ 09 ஆம் இலக்க கடிதம் மூலம் NPOC ஐ நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதி அமைச்சின் செயலாளரிற்கு தெரிவிக்கப்பட்டது. தேவை ஏற்பட்டதும் நீர்ப்பாசன அமைச்சினால் உரிய முறையில் NPOC அழைக்கப்படும். | கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் தேசிய செயற்திட்ட மேற்பார்வைக் குழு செயற்படுத்தப்பட வேண்டும். |
| 05 | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் | ”காணி சுவீகரிப்பு, மீள்குடியேற்ற உதவி மற்றும் பாதுகாப்பு அமுல்ப்படுத்தல்” என்ற செயற்திட்டக் கூறை அமுல்ப்படுத்துவதற்காக மாற்றுத் தீர்வு இல்லாமல், முதலாவது | செயற்திட்டத்துடன் தொடர்புடைய கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் உலக வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட PAD இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கூறு-3 என்பது ”காணி சுவீகரிப்பு, | மறுசீரமைப்பின் போது செயற்திட்டக் கூறுகள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் மீதான தாக்கம் கருத்தில் கொள்ளப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மறுசீரமைப்பு பத்திரத்திற்குப் பின்னர் அகற்றப்பட்டிருந்தது. | மீள்குடியேற்ற உதவி மற்றும் பாதுகாப்பு அமுல்ப்படுத்தல்” கூறு ஆகும். ஆனால் நாட்டில் நிலவும் சூழ்நிலையால் செயற்திட்டக் கடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டு அவை மறுசீரமைக்கப்பட்டன. | வேண்டும். |
| 06 | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பின்னிணைப்பு 5 இன் 3 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்திற்கான பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்திற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கான கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னரும் பின்னரும், அரசாங்கம் பல்வேறு குழுக்களை நியமித்து, செயற்திட்டத்தைத் தொடரலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்வதற்கு பரிந்துரைகளைப் பெற்றது. இதன் காரணமாக செயற்திட்டத்திற்காக குறித்துரைத்த பாதீட்டு மதிப்பீட்டை தயாரிப்பது கடினமான பணியாக இருந்தது. இறுதியாக, செயற்திட்டத்தை மீள்நோக்கமிட்டு அமுல்ப்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்ததுடன், 2023 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அதன் பிரகாரம் செயற்திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் செயற்திட்டத்திற்கான பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| கூறு-01 உயர் தாக்க வானிலை, வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் பற்றிய முன்னறிவிப்பு மற்றும் முன்கூட்டியே எச்சரிக்கை. | | 5.87% | 4.00% | அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது. | PMU மற்றும் IAs இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் 2022 இல் செயற்திட்டம் மெதுவான முன்னேற்றத்தை அடைந்தது.<br><br>செயற்திட்ட முகாமைத்துவ பிரிவை ஸ்தாபித்தல் மற்றும் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதம்.<br><br>செயற்திட்டத்தை மறுசீரமைப்பதற்கு குழுக்களை நியமித்தல்.<br><br>புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதையும் வெளிநாட்டு நிபுணர்களை பணிக்கமர்த்துவதையும் நிறுத்துதல். |
| கூறு-02 கீழ் களனி ஆற்றுப்பள்ளத்தாக்கில் வெள்ள அபாயத் தணிப்பு முதலீடு | 2.1 அம்பத்தலே உவர்நீர்த் தடை மற்றும் வெள்ளம் மற்றும் மண்சரிவு தணிப்புக்கான தயார்படுத்தல் ஆய்வுகள் | 11.96% | 4.00% | அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது. | |
| | 2.2 வீ ஓயா நீர்த்தேக்கத்தின் விரிவான வடிவமைப்புக்கள், கேள்வி கோரல் ஆவணங்கள், மீள்குடியேற்ற செயல்நடவடிக்கை திட்டம் (RAP) சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIAs) (ஐ.அ.டொலர் 6 மில்லியன்) | 12.70% | 5.00% | அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது. | |
| | 2.3 மேல் தெரணியகல நீர்த்தேக்கத்திற்கான சாத்தியவள ஆய்வுகள் மற்றும் விரிவான வடிவமைப்புக்கள், RAP மற்றும் EIA, கேள்விகோரல் ஆவணங்கள் ஏனைய ஆய்வுகள் (ஐ.அ.டொலர் 7 மில்லியன்) | 5.53% | 0.00% | காலப்பகுதியின் போது எந்தவொரு செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| | 2.4 களனியிலிருந்து டிரையர் (dryer) ஆற்றுப்பள்ளத்தாக்குகளுக்கு டிரான்ஸ்- ஆற்றுப்பள்ளத்தாக்கு (trans-basin) திசைதிருப்பல்களுக்கான முன்-சாத்தியம் மற்றும் சாத்தியவள ஆய்வுகள் (ஐ.அ.டொலர் 1 மில்லியன்) | 26.5% | 0.00% | காலப்பகுதியின் போது எந்தவொரு செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| | 2.5 கீழ் களனி வெள்ளப் பாதுகாப்புப் பணிகளின் விரிவான பொறியியல் வடிவமைப்புக்கள் (ஐ.அ.டொலர் 5 மில்லியன்) | 9.50% | 0.00% | காலப்பகுதியின் போது எந்தவொரு செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | PMU மற்றும் IAs இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் CResMPA செயற்திட்டம் 2022 இல் மெதுவான முன்னேற்றத்தை அடைந்தது. செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவை நிறுவுவது 2022 பெப்ரவரி வரை தாமதமாகியதுடன் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு 2022 பெப்ரவரி முதல் யூலை வரை இடம்பெற்றது. அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதைத் தடுத்ததால், திட்டமிடப்பட்ட செயற்திட்டச் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது.<br><br>பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக நிச்சயமற்ற நிலைமைகளுக்கு மத்தியில் செயற்திட்டத்தின் தொடர்ச்சியைத் தீர்மானிப்பதற்கு அரசாங்கம் குழுக்களை நியமித்தது, சில செயற்பாடுகளை அகற்றி ஏனையவற்றை அடுத்தடுத்த கட்டங்களுக்கு மாற்றுவதன் மூலம் செயற்திட்டத்தின் மறுசீரமைப்பிற்கு வழிவகுத்தது.<br><br>புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பது மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்வதை அரசாங்கம் நிறுத்தியுள்ளது, இதனால் வளிமண்டலவியல் திணைக்களத்திற்கான தேசிய வானிலை முன்னறிவிப்பு மற்றும் முன் எச்சரிக்கை நிலையம் கைவிடப்பட்டது, இது கட்டம்-1 விநியோகம் மற்றும் கட்டம்-2 இற்கு மாற்றுவதை பாதிக்கிறது.<br><br>நிபுணர்களை பணிக்கமர்த்துவது இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் உவர்நீர்த் தடையை அமைப்பதற்கு வெளிநாட்டு நிபுணர் குழுவை பணிக்கமர்த்துவதில் தாமதம் ஏற்பட்டதுடன் வீ ஓயா நீர்த்தேக்கத்திற்கான விரிவான பொறியியல் வடிவமைப்புகளை தயாரிப்பதை இது மோசமாகப் பாதித்தது. மேல் தெரணியகல நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கான சாத்தியவள ஆய்வு, களனி ஆற்றின் நீரை ஏனைய ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கு திருப்பிவிடுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிவதற்கான முன் சாத்தியவள ஆய்வு மற்றும் கீழ் களனி ஆற்றுப்பள்ளத்தாக்கில் வெள்ளக் கட்டுப்பாட்டு அணைகளை அமைப்பதற்கான விரிவான பொறியியல் வடிவமைப்புகளைத் தயாரித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, செயற்திட்டத்தின் கட்டம்-II இற்கு மாற்றப்பட்டது.<br><br>நீர்ப்பாசன அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் உலக வங்கி என்பன இணைந்து 25 மாவட்டங்களில் அவசர புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக செயற்திட்டக் கூறுகள் 1 மற்றும் 2 இல் இருந்து ஐ.அ.டொலர் 15 மில்லியனை மீள்ஒதுக்கீடு செய்தன. செயற்திட்டத்தின் மறுசீரமைப்பு தற்போது பூர்த்தியடைந்துள்ளது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | மறுசீரமைப்பின் பிரகாரம் திட்டமிடுவதற்கும், திட்டமிட்டவாறு ஒவ்வொரு கூறின் கீழ் அனைத்து செயற்திட்ட செயற்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 வழமைக்கு மாறான நடவடிக்கைகள்/ செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 01 | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கூறு 02 இன் கீழ் அம்பத்தலே உவர்நீர்த் தடையை நிர்மாணிப்பதற்கும், தயார்படுத்தல் ஆய்வுகளுக்கும் ரூபா 5 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. எரிபொருள் செலவினங்களை மீள்நிரப்புச் செய்வதற்காக இந்தச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமையும் போதிய தகவல்கள் கூறு 2 | இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார சவால்கள் காரணமாக இச் செயற்திட்டம் மீள் நோக்கமிடப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட 92 மில்லியன் டொலர்களில் 15 மில்லியன் டொலர்கள் நேரடியாக மக்களுக்கு நன்மை பயக்கும் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் நீர்ப்பாசனத் துறையில் குளங்கள், கால்வாய்கள் மற்றும் அணைகளை மீட்டெடுப்பதை இந்த செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2022 | பொறியியல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் கணக்கீட்டு செயன்முறையை அமுல்ப்படுத்தல் முகவரிற்கான கொடுப்பனவிற்காக முறையான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.<br><br>செயற்திட்டச் செலவினங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | இன் கீழ் அந்த நடவடிக்கைக்கான எரிபொருள் செலவினங்களின் தகுதியை சரிபார்ப்பதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது.<br><br>மேற்படி உறுதிச்சீட்டுக்களில் இணைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியல்களின் விபரங்களின் பிரகாரம் ராஜாங்கனை, ஹுருலுவெவ மற்றும் அனுராதபுரம் பிரதேச பொறியியல் அலுவலகங்கள் முறையே 476L, 450L மற்றும் 500L மொத்த டீசல் இருப்புக்களை கொள்வனவு செய்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டதுடன் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட எரிபொருள் இருப்பு பற்றிய தகவல்கள் எதுவும் காணப்படவில்லை. | ஆம் ஆண்டில், இந்த மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு முன்னர் மாவட்ட அதிகாரிகள் களத்திற்குச் சென்று செயற்திட்டப் பகுதிகளை ஆய்வு செய்ய வேண்டியிருந்ததுடன் இந் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு செயற்திட்டத்தின் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டது. இவ்வகையில், எரிபொருளுக்காக செலவிடப்பட்ட பணம், நீர்ப்பாசனத் திணைக்கள நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட கூறு-02 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது.<br><br>செயற்திட்ட நிதிகளின் பணவளிப்புக்களில் தாமதங்கள் ஏற்பட்டதால், சில பிராந்திய அலுவலகங்கள், தங்களின் திணைக்கள நிதிகளை எரிபொருளுக்கு பயன்படுத்தியிருந்தன. இவ்வாறு பயன்படுத்தப்படும் எரிபொருளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, ஆண்டின் போது அதே எண்ணிக்கையிலான லீற்றர்களை மொத்த இருப்புக்களாக கொள்வனவு செய்வதற்கு அவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். | வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 02 | செயற்திட்டத்துடன் தொடர்பில்லாத நடவடிக்கையான உமா ஓயா கள விஜயம் தொடர்பான ரூபா 136,120 தொகையான எரிபொருள் செலவினங்கள் CResMPA செயற்திட்டத்தின் கீழ் அறவிடப்பட்டது. | உமா ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் அமைச்சின் கீழ் இரண்டு நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து, பாரிய சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ள ஒரு செயற்திட்டமாகும். உமா ஓயா செயற்திட்ட அதிகாரிகள் நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கும் போது எதிர்கொள்ளும் சவால்கள், அவற்றுக்கு வழங்கப்பட்ட தீர்வுகள் போன்றவற்றைப் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக CResMPA அதிகாரிகளின் சார்பில் களப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | வெளிப்படையாகத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு மாத்திரமே செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 01 | மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (ஐபீஆர்டி) 2022 மார்ச் 31 இல் செயற்திட்டத்திற்கு ரூபா 173 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டில் ரூபா 29.4 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 160 மில்லியன் தொகை கணக்கில் பயன்படுத்தாமல் விளைவற்றிருந்தது. | பல்வேறு காரணங்களால் இச்செயற்திட்டத்தின் பணிகளை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. முதலில் திட்டமிட்டவாறு 06 மாதங்களுக்கு தேவையான பணமாக ஐ.அ.டொலர் 0.58 மில்லியன் உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டது. மேற்குறிப்பிட்டவாறு செயற்திட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை, ஆண்டின் போது ரூபா 29,385,719 தொகை மாத்திரமே செலவிடப்பட்டது. | செயற்திட்டத்திற்காக வழங்கப்படும் நிதியானது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பொருளாதார ரீதியாக செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |
| 02 | 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டின் கீழ் ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும்ரூபா 76.72 மில்லியன் (ஒதுக்கீட்டில் 5.11%) மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது ஒதுக்கீட்டில் 94.89% பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் உள்ள செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2021 - 2026 காலப்பகுதியினுள் செயற்திட்டச் செயற்பாடுகளை பூர்த்திசெய்ய முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவை நிறுவுவது 2022 பெப்ரவரி வரை தாமதமானதுடன் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு 2022 பெப்ரவரி முதல் யூலை வரை இடம்பெற்றது. அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதைத் தடுத்ததால், திட்டமிடப்பட்ட செயற்திட்டச் செயற்பாடுகளைச் அமுல்பல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. | செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் பிரிவு 01, ஏ.2 இன் பிரகாரம், போதுமான தொழில்முறை மற்றும் நிர்வாக பதவியணியினரைக் கொண்ட ஒரு செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழு, தகைமை மற்றும் அனுபவம் மற்றும் வங்கிக்கு திருப்திகரமான குறிப்பு விதிமுறைகளின் கீழ், அமுல்ப்படுத்துவதற்கு பொறுப்பாகும் செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பு செயற்திட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து 2 மாதங்களுக்குள் நிறுவப்பட வேண்டும்.

எனினும், 2022 திசெம்பர் 15 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட முழு பதவியணியினரும் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2023 யூன் 26 வரை செயற்திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

| பதவியணி நிலை | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டது | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | |
| 1. சிரேஷ்ட பொறியியலாளர்-பெறுகை | 01 | 00 | 01 | அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் பதவியணியினர் குறைப்பிற்கு வழிவகுத்து, ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டு, செயற்திட்ட பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. மேற்குறிப்பிட்ட கொள்கை முடிவுகள் காரணமாக செயற்திட்டச் செயலாளர், அமைச்சு நியமனங்களைச் செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளது.<br><br>அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது. | அரசாங்கத்தின் சுற்றறிக்கைகள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் குறைந்தபட்ச பதவியணியினரை பேணுவதன் மூலம் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 2. தொடர்பாடல் உத்தியோகத்தர் | 01 | 00 | 01 | | |
| 3. சமூக மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தர் | 01 | 00 | 01 | | |
| 4. சாரதி | 04 | 03 | 01 | | |

## 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 01 | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பின்னிணைப்பு 05, பிரிவு 5 இன் பிரகாரம் ஒவ்வொரு செயற்திட்ட நடவடிக்கைகளுக்கும் தனித்தனி கணக்கு புத்தகங்கள் பேணப்பட வேண்டும். GOSL நிதிகள் மற்றும் வெளிநாட்டு நிதிகளால் ஏற்படும் மூன்று கூறுகளின் கீழ் வெவ்வேறு நடவடிக்கைகளின் செலவினங்களுக்கான துணைப் பேரேட்டு கணக்குகளை செயற்திட்டம் பேணியிருக்கவில்லை. | PAD இன் பின்னிணைப்பு 05 இன் பிரகாரம், PMU செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக தனியான கணக்கு புத்தகங்களை பேணுகிறது. அனைத்து பேரேட்டுக் கணக்குகளும் MS Excel மென்பொருளைப் பயன்படுத்தி பேணப்படுகின்றதுடன் அவற்றின் வன் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்து செலவினங்களும் கூறு ரீதியாக, இறுதிக் கணக்கின் மூலம் தனித்தனியாக வழங்கப்பட்டன. எனினும், 2023 ஆம் ஆண்டில், செயற்திட்டத்திற்கான கணினிமயமாக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அடுத்த ஆண்டு இறுதி கணக்குகளில் இருந்து விரிவான பாதீட்டுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், ஒவ்வொரு செயற்திட்ட நடவடிக்கைகளுக்கும் தனித்தனி கணக்கு புத்தகங்கள் பேணப்பட வேண்டும். GOSL நிதிகள் மற்றும் வெளிநாட்டு நிதிகளால் ஏற்படும் மூன்று கூறுகளின் கீழ் வெவ்வேறு நடவடிக்கைகளின் செலவினங்களுக்காக துணை பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட வேண்டும். |
| 02 | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பின்னிணைப்பு 5 இன் பிரிவு 13 இன் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு கணக்கீட்டு முறைமை ஒன்றை பேண வேண்டும், இது பாதீட்டு வகைப்படுத்தலின் மூலம் | ஆலோசனை பெறுகைக் குழுவின் நியமனம் நிச்சயமற்றதன் காரணமாக செயற்திட்டத்தின் கணினிமயமாக்கப்பட்ட கணக்கீட்டு முறைமை தாமதமாகியது. தற்போது, MIS அமல்படுத்தலிற்கு பொருத்தமான ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவுசெய்வதற்கான மதிப்பீட்டுப் | செயற்திட்டமானது உறுதியான நிதி முகாமைத்துவத்தை உறுதி செய்வதற்கான கணக்கீட்டு முறைமையை பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவின அறிக்கைகளை உருவாக்குவதற்கு வசதியளிக்கிறது, இதனால் பாதீட்டுடன் ஒப்பிடவும் செலவினங்களை செயற்திறனாக கண்காணிக்கவும் முடியும். PMU செயற்திட்டத்திற்காக அத்தகைய கணக்கீட்டு மற்றும் கண்காணிப்பு முறைமையை பேணியிருக்கவில்லை. | பணிகள் நடைபெற்று வருகின்றன. | |
| 03 | கடன் உடன்படிக்கையின் பட்டியல் 2, பிரிவு 1 இன் பிரகாரம் செயற்திட்டம் மேம்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்த பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் செயற்படுத்தப்படும், வங்கியால் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயற்பாட்டு நிதி முகாமைத்துவ மென்பொருள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், CRIP செயற்திட்டத்தின் கீழ் ரூபா 7.4 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு மென்பொருளைப் பயன்படுத்துவதற்கான திறனைச் சரிபார்ப்பதற்கு செயற்திட்டம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | CRIP செயற்திட்டத்திற்காக ரூபா 7.4 மில்லியன் கிரயத்தில் கணக்கீட்டு முறைமையுடன் கூடிய முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) கொள்வனவு செய்யப்பட்டது. இந்த MIS ஆனது CRIP செயற்திட்டத்தின் அளவுகோல்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. CRIP செயற்திட்டத்தின் ரூபா 23,875 மில்லியன் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சுமார் 800 ஒப்பந்தப் பொதிகளின் தகவல்கள் இந்தத் தரவு முறைமையில் உள்ளிடப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் விரைவாகவும் எளிதாகவும் கண்காணிக்கப்பட்டன.<br><br>CRIP செயற்திட்டத்தின் சில செயற்பாடுகள் CResMPA செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்படுகின்றன, ஆனால் இது மூன்று-கட்ட நிகழ்ச்சித்திட்டமாகும், மேலும் இது வெவ்வேறு நோக்கங்கள் மற்றும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டது. காணி சுவீகரிப்புக்கள், இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், இழப்பீடு பெறுபவர்களின் தகவல்களை தளத்தில் உள்ளீடு செய்தல், GIS மென்பொருளைப் பயன்படுத்தி கண்காணித்தல் போன்ற பல சிக்கலான பணிகள் CResMPA செயற்திட்டத்தின் MIS மூலம் செய்யப்பட வேண்டியுள்ளது. | செயற்திட்டமானது கடன் உடன்படிக்கையுடன் இணங்க வேண்டியதுடன் செயற்பாட்டு நிதி முகாமைத்துவ மென்பொருளை அமுல்ப்படுத்த வேண்டும். மேலும், தேவையான புதுப்பிப்புக்களுடன் CRIP செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்த கணக்கீட்டு மென்பொருளைப் பயன்படுத்த வேண்டும். |
| 04 | 2022 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மூன்று கூறுகளின் கீழ் ரூபா 1,500 | ஆண்டின் தொடக்கத்தில், பாதீட்டு மதிப்பீடுகளின் ஊடாக இச்செயற்திட்டத்திற்காக ரூபா 1,500 மில்லியன் நிதியேற்பாடு | மதிப்பீட்டின் மாற்றத்திற்குப் பின்னர், திருத்தப்பட்ட மதிப்பீட்டின் அங்கீகாரம் அருகிலுள்ள செயற்திட்ட |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட பின்னிணைப்பு 2, பாதீடு எதிர் செலவினத்தின் பிரகாரம் ஆரம்ப மதிப்பீடு ரூபா 570 மில்லியனாக மாற்றப்பட்டிருந்தது. எனினும், மேற்படி மாற்றங்களுக்கான முறையான அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கப்பட்டது. எனினும், உப செயற்திட்டங்களைத் தொடங்குவதில் தாமதம் மற்றும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் உறுதியான முடிவு காணப்படாதமை காரணமாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை திட்டமிட்டவாறு பயன்படுத்த முடியாதிருந்தமை தெளிவாகிறது. அமைச்சுடனான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், நீர்ப்பாசன அமைச்சினுள் ஏனைய செயற்திட்டங்களுக்கு ரூபா 930 மில்லியன் தொகையை மாற்றுவதற்கு இணங்கப்பட்டது. 2022-1980000-பீசீயூவீ-00000027 ஆம் இலக்க இடமாற்றக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, செயற்திட்டத்திற்கான வருடாந்த மதிப்பீட்டுத் தொகை ரூபா 570 மில்லியன் வரை குறைக்கப்பட்டு, அதற்கேற்ப செலவினங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. | வழிநடாத்தல் குழுக் கூட்டத்தில் பெறப்பட வேண்டும். |
| 05 | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவத்தால் செயற்திட்டக் கூறு-3 இற்காக மீளாய்வாண்டின் இறுதியில் எதிர்பார்க்கப்படும் பௌதீக செயலாற்றல் 2.97 சதவீதமாகவும், உண்மையான செயலாற்றல் 14 சதவீதமாகவும் இருந்தது. எனவே செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி தொகையில் 5 மடங்கை செயற்திட்டம் செலவிட்டிருந்தது. | 2022 இன் வேலைத் திட்டத்தில் இல்லாத உலக வங்கிக்கு திட்டமிடப்படாத முன்-இறுதிக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு செயற்திட்ட நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய செலவினங்கள் வேலைத் திட்டத்துடன் இணங்குகின்றன, மேலும் சம்பளம் மற்றும் வாகன பராமரிப்பு கிரயத்திற்கு மேலதிகமாக PCT அலுவலகத்தை செயற்படுத்துதல், பாதுகாப்பு சேவைகள், மின்சாரம் மற்றும் துப்புரவு சேவைகளிற்காக MASL வளாகத்தை ஆக்கிரமிப்பதற்காக அத்தகைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்திட்ட முகாமைத்துவ கிரயம் மதிப்பீடுகளின் கீழ் வைக்கப்பட வேண்டும். |
| 06 | 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த செயற்திட்டக் கிரயத்தில் ரூபா 71.05 மில்லியன் தொகை அல்லது 92.6 சதவீதம் சம்பளம், படிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த | செயற்திட்டமானது தற்போது வரையறுக்கப்பட்ட பணியாளர்களைக் கொண்டு செயற்படுத்தப்படுகிறது, மேலும் அவர்களின் சம்பளம் மற்றும் படிகள் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க வழங்கப்படுகின்றன. மேலும், | |

போதிலும் செயற்திட்டத் திட்டத்தின் பிரகாரம் எந்தவொரு செயற்திட்ட நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டங்களின் ஆரம்ப கட்டங்களில் நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்கு அதிக சதவீத நிதியை ஒதுக்குவது பொதுவான நடைமுறையாகும். செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டங்களில், முழு அளவிலான அபிவிருத்திப் பணிகளுக்குப் பதிலாக அத்தியாவசிய தயார்படுத்தல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படும்.